வீட்டுப்

எங்க வீட்டுப் பிள்ளை—நடிகர்கள்

எம். ஜி. ஆர், பி. சரோஜாதேவி, நம்பியார், ரத்னா,

பண்டரிபாய், ரங்காராவ், தங்கவேலு, நாகேஷ்,
மாதவி, எல். விஜயலட்சுமி, மற்றும் பலர்.

வசனம் — **சக்தி கிருஷ்ணசாமி**

இசை — **விஸ்வநாதன்-ராமமூர்த்தி**

டைரக்ஷன்

சாணக்யா

எங்க வீட்டுப் பிள்ளை—பாடல்கள்

இயற்றியவர்: ஆலங்குடி சோமு

பாட்டு 1

பாடியவர்கள்: எல். ஆர். ஈஸ்வரி குழுவினர்

கண்களும் காவடிச் சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தைப் பந்தாடட்டும்
பெண்மையும் ஆண்மையும் ஒன்றாகட்டும்
பேரின்ப வாசலில் நின்றாடட்டும்
உள்ளங்கள் நேரான வழி காணட்டும்
உறுதியிலே துன்பம் தூளாகட்டும்
நன்மையே உன்வாழ்வின் தொழிலாகட்டும்
நாடெல்லாம் உன்னைக்கண்டு புகழ்பாடட்டும்
மண்ணகமெல்லாம் நதி பாயட்டும்
மார்கழித் துதிபாடிக் கதிர் சாயட்டும்
என்ன செய்வோமென்ற நிலை மாறட்டும்
உன்னாலே மக்கள் எண்ணம் நிறைவேறட்டும்
தூங்கிய காலங்கள் முடிவாகட்டும்
தோள்களிலே வீரம் நடைபோடட்டும்
கொள்கையிலே அன்பு ஒளி வீசட்டும்
கோழையும் உன்னாலே புலியாகட்டும்

இயற்றியவர்: வாலி

பாட்டு 2

பாடியவர்கள்: டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா

சௌ: பெண் போனால்—இந்தப் பெண் போனால்—இவள்
பின்னாலே என் கண் போகும்
சுசீலா: வந்தாயோ—கூட வந்தாயோ—முன்பு
இல்லாத சுகம் தந்தாயோ...

இள: பாதி நிலாவை விண்ணில் வைத்து
மீதி நிலாவை மண்ணில் வைத்து
மண்ணில் வைத்ததை மங்கை உனது
கண்ணில் வைத்தானே
லீலா: ஆயிரம் பூவை அள்ளி எடுத்து
அள்ளி எடுத்ததை கிள்ளி எடுத்து
கொஞ்சம் கொஞ்சமாய் தேனை எடுத்து
நெஞ்சில் வைத்தானே...
இள: வானவில் பெண்ணாய் வந்ததென்று
வார்த்தையில் போதை தந்ததென்று
அன்னம் நடந்தாள் ஆடிக்கிடந்தால்
இன்னும் சொல்லவோ...
லீலா: காதலன் பேரைச் சொல்லிக் கொண்டு
காத்திருந்தாளாம் அல்லித் தண்டு
தென்றல் அடிக்க தாவி யணைக்க என்ன சுகமோ...

இயற்றியவர்:	பாட்டு 3	பாடியவர்கள்
வாலி		டி. எம், சௌந்தரராஜன், பி. சுசிலா

இள: குமரிப பெண்ணின் உள்ளத்திலே
குடியிருக்க நான் வரவேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால்
வாடகை என்ன தரவேண்டும்
லீலா: குமரிப் பெண்ணின் கைகளிலே
காதல் நெஞ்சைத் தரவேண்டும்
காதல் நெஞ்சைத் தந்துவிட்டு
குடியிருகக நீ வரவேணடும்
இள: திங்கள் தங்கையாம் தென்றல் தோழியாம்
கன்னி ஊர்வலம் வருவாள்...
லீலா: அவள் உன்னைக் கண்டு உயிர்க் காதல் கொண்டு
தன் உள்ளம் தன்னையே தருவாள்
இள: நான் அள்ளி கொள்ள அவள் பள்ளி கொள்ள
சுகம் மெள்ள மெள்ளவே புரியும்
லீலா: கை தொடுவார் தொடாமல் தூக்கம் வருமோ
துணையைத் தேடி நீ வரலாம்
இள: பூவை என்பதோர் பூவைக் கண்டதும்
தேவை தேவை என்று வருவேன்
லீலா. இடைமின்னல் கேட்க நடை அன்னம் கேட்க—அதை
உன்னைக் கேட்டு நான் தருவேன்
இள: கொடுத்தாலும் என்ன எடுத்தாலும் என்ன
ஒரு நாளும் அழகு குறையாது அந்த அழகே வராமல்
ஆசை வருமோ அமுதும் தேனும் நீ பெறலாம்

இயற்றியவர்: பாட்டு 4 பாடியவர்
வாலி டி. எம். சௌந்தரராஜன்

நான் ஆணையிட்டால்—அது நடந்து விட்டால்—இங்கு
ஏழைகள் வேதனைப் படமாட்டார்
உயிர் உள்ளவரை—ஒரு துன்ப மில்லை—அவர்
கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்
ஒரு தவறு செய்தால்—அதைத்
தெரிந்து செய்தால்—அவன்
தேவனென்றாலும் விடமாட்டேன்
உடல் உழைக்கச் சொல்வேன் —அதில்
பிழைக்கச் சொல்வேன்—அவர்
உரிமைப் பொருள்களைத்தொடமாட்டேன்
சிலர் ஆசைக்கும் தேவைக்கும்
வாழ்வுக்கும் வசதிக்கும் ஊரார் கால பிடிப்பார்
ஒரு மானமில்லை—அதில் ஈனமில்லை—அவர்
எப்போதும் வால் பிடிப்பார் எதிர் காலம் வரும்
என் கடமை வரும்—இந்தக்
கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்
பொது நீதியிலே புதுப பாதையிலே—வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்
இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும்
நானா பார்த்திருப்பேன் ஒரு கடவுள் உண்டு
அவன் கொள்கை உண்டு—அதை
எப்போதும் காத்திருப்பேன்
முன்பு ஏசு வந்தார் பின்பு காந்தி வந்தார்—இந்த
மானிடர் திருந்திடப் பிறந்தார் இவர் திருந்தவில்லை
மனம் வருந்தவில்லை—அந்த
மேலோர் சொன்னதை மறந்தார்

இயற்றியவர்: பாட்டு 5 பாடியவர்கள்
வாலி டி.-எம்- சௌந்தராஜன், எல். ஆர். ஈஸ்வரி

பெ: நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன் அவன்
மாம்பழம் வேண்டு மென்றான்
அதைக் கொடுத்தாலும் வாங்கவில்லை இந்தக
கன்னம் வேண்டுமென்றான்
ஆ: நான் தண்ணீர்ப் பந்தலில் நின்றிருந்தேன்—அவள்
தாகம் என்று சொன்னாள்
நான் தன்னந் தனியாய் நின்றிருந்தேன்—அவள்
மோகம் என்று சொன்னாள்
பெ: ஒன்று கேட்டால் என்ன கொடுத்தால் என்ன
குறைஞ்சா போய்விடும் என்றான்
ஆ: கொஞ்சம் பார்த்தால் என்ன பொறுத்தால் என்ன

மறந்தா போய்விடும் என்றாள்
பெ: அவன் தாலிகட்டும் முன்னாலே தொட்டாலே போதும் என்றே துடி துடிச்சான்
ஆ: அவள் வேலிகட்டும் முன்னாலே வெள்ளாமை ஏது என்றே கதை கடிச்சாள்
பெ: அவன் காதலுக்குப் பின்னாலே கல்யாணம் வரும் என்றே கையடிச்சான்
ஆ: அவள் ஆகட்டும் என்றே ஆசையில் நின்றே அத்தானின் காதைக் கடிச்சா
ஆ: அவள் பூவிருக்கும் தேனெடுக்க பின்னாலே வந்து வண்டாய் சிறகடிச்சா
பெ: அவள் தேனெடுக்க வட்டமிடும் மச்சானைப் புடிக்க கண்ணாலே வலே விரிச்சா
ஆ: அவள் ஜோடிக் குயில் பாடுவதை சொல்லாமல்சொல்லி மெதுவா அணைச்சிகிட்டா
பெ: அவள் ஆடியிலே பெண்ணாகி அஞ்சாறு மாசத்திலே அழகா தெரிஞ்சுகிட்டா

இயற்றியவர்: பாட்டு 6 பாடியவர்கள்
ஆலங்குடி சோமு பி. சுசீலா, எல். ஆர். ஈஸ்வரி

வானகமே வையகமே வளர்ந்து வரும் தாயினமே
ஆணுலகமேடையிலே... ஆசை நடை போடாதே...
மலருக்கு தென்றல் பகையானால்—அது
மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு..........
நிலவுக்கு வானம் பகையானால்—அது
நடந்திட வேறே வழியேது
பறவைக்குச் சிறகு பகையானால்—அது
பதுங்கி வாழ்ந்திடக் கால்களுண்டு
உறவுக்குநெஞ்சே பகையானால்—மண்ணில்
உயிரினம் பெருகிட வகையேது
படகுக்குத் துடுப்புபகையானால்—அங்கு
பாய் மரத்தாலே உதவியுண்டு........
கடலுக்கு நீரே பகையானால்—அங்கு
கதை சொல்லும் அலைகளுக்கிடமேது
கண்ணுக்குப் பார்வைபகையானால்...அதைக்
கருத்தால் உணர்ந்திட வழியுண்டு
பெண்ணுக்குத் துணைவன்பகையானால்—அந்த
பேதையின் வாழ்வில் ஒளியேது

குமரன் பிரிண்டர்ஸ், மதுரை-1

விற்பனையாகிறது

தமிழக வரலாற்றில் புதிய வரலாறு
படைத்துவரும் புரட்சித்தலைவர்
M.G.R. வீரவரலாறு..

சிவாஜியின் விமர்சனங்களும்
150 பாடல்களும்

மதுகுடிப்பதினால் ஏற்படும் தீமைகள்

சினிமாவில "பக்திப்பாடல்கள்"

டி எம் சௌந்தரராஜன் சீர்காழி
கோவிந்தராஜன் பாடிய பக்திப்பாடல்கள்

சூலமங்கலம் சகோதரிகள மற்றும
பலர் பாடிய "பக்திப்பாடல்கள்

இசைமுரசு நாகூர் அனிபா பாடிய
இஸ்லாமியப் பாடல்கள்

சினிமாவில் "தத்துவப்பாடல்கள்
(1 முதல் 6 வரிசை)

மலிவுவிலை சினிமா பாடல்கள்
"மக்கள்திலகம்" 1 முதல் 6 வரை
நடிகர் திலகம் 1 முதல் 8 வரை

குமரன் கம்பெனி

223, மேலமாசிவீதி, மதுரை.1.